Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (07 - 03 - 1991) வியாழக்கிழமை ஓசை 17

## 68 நிலையங்களில் 11,031 மாணவர் தோற்றுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 68 நிலையங்களில் 11,031 மாணவர்கள் தோற்ற இருக்கின்றனர். இந்தப் பரீட்சை தொடர்பான விளக்கம் கல்வித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அச்சுவேலிப்பகுதிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் கோப்பாய் பரீட்சை நிலையங்க (4ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரசேகரின் முடிவு துரதிஷ்ட வசமானது

## இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் வியப்பு

(சென்னை)

பிரதமர் சந்திரசேகர் பதவி துறக்க எடுத்த முடிவு தன்னிச்சையானது பிரதமரின் பதவி விலகல முடிவு துரதிஷ்டமானது இம் முடிவு எமமை வியப்பிற்குள்ளாகியது இவ்வாறு முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் கட்சித் தலைவருமான ராஜீவ் காந்தி கருத்து வெளியிட்டு உள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்; ஜனதா தள் (எஸ்) அரசுக்குக் காங்கிரஸ் முழு ஆதரவளித்து வந்தபோதும அரசு காங்கிரஸ் கட்சியை நம்பவில்லை. காங்கிரஸ் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன இருந்த போதிலும் நெளிவு சுளிவுப் போக்கைக் கடைப்பிடித்து அரசுக்கு ஆதரவளித்து வந்ததாக ராஜீவ் காந்தி கூறினார். காங்கிரஸ் கட்சியின மனத்தை சந்திரசேகர் அரசு நோகடித்து விட்டது என்பதே காங்கிரஸ் கட்சித் தலைவரின பிரதான குற்றச் சாட்டாகும்.

இதனிடையில் பிரதமர் (4ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத்தேர்தலுக்கு இ. காங்கிரஸ் கோரிக்கை

(டில்லி)

இந்தியாவில் புதியபொதுத் தேர்தலை நடாத்தும்படி இந்திரா காங்கிரஸ் கட்சியும் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனிடம் கோரிக்கை விடுத்து உள்ளது. இக்கோரிக்கை சந்திரசேகர் பதவி விலகிய பின்பு (4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு எதிர்பார்த்தது போல் இலலை

(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சனின் இறுதிக் கிரியைகளில் பொது ஆயிரக் கணக்கானோர் கலந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமர் சந்திரசேகர் பதவியை ராஜினாமா செய்தார்

(டில்லி)

இந்தியப் பிரதம மந்திரி சந்திரசேகர் பதவி விலகியிருக்கிறார். அதைக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கடராமன் ஏற்றுள்ளார். அரசியல் நிச்சயமற்ற தன்மையை நீக்க உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும என்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்திரா காங்கிரஸ் கட்சி தொடர்ந்து அரசாங்கத்தைப் பகிஷ்கரித்ததால் தன்னால் தொடர்ந்து அரசாங்கத்தை தலைமைதாங்கி நடத்த முடியவில்லை. என்று மக்கள் அவையில் தெரிவித்த பின்பு நேற்றுப்பிற்பகல் குடியரசுத் தலைவரிடம்



பதவி விலகல் கடிதத்தை அவர் சமர்ப்பித்தார்.

கடந்த 117 நாட்களாகப் பிரதமராக இருந்த சந்திரசேகரின் பதவிவிலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்ட குடியரசுத் தலைவர் ஆர். வெங்கடராமன் மாற்று ஒழுங்குகள் பேத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகர் அரசாங்கம் தானாகவே கவிழ வேண்டும் -ராம் விலாபாசுவான்

(டில்லி)

சந்திரசேகரா அரசாங்கம் தானாகவே கவிழச் செய்ய வேண்டும் என எதிர்க்கட்சிகள் கருத்துத் தெரிவித்திருப்பதாக ஜனதாதள் தலைவர் ராம் விலாபாசுவான் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் காலை புதுடில்லியில் அனைத்து எதிர்க்கட்சிகளின் கூட்டம நடந்தபோது இந்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்டதாக ராம் விலாபாசுவான் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் வைக்கப்படும் தீர்மானமொன்று ஏற்றுக்கொள்ளப்படாமலேயே அரசாங்கம் கவிழ வேண்டும என அவை கருத்துத் தெரிவித்தன.

இந்திரா காங்கிரஸ் தலை (4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகர் இராஜினாமா; தலைவர்களின கருத்துக்கள்

★ சந்திரசேகர் இராஜினாமா எதிர்பார்க்கப்பட்டது தான். ஜனதா தள் தலைவரும். முன்னாள் பிரதம மந்திரியுமான வி.பி. சிங்.

★ இந்திராகாங்கிரஸ் கட்சியின துர்ப்ரசாரம் தன் பிரதம மந்திரி சந்திரசேகரை இராஜினாமாச் செய்யுமாறு கட்டாயபபடுத்திறறு

ஜனதா தள தலைவர் ஜோர்ஜ் பர்னாண்டோஸ்

★ சிறுபான்மை அரசுகள் எப்போதுமே பாதிப்புக்குப் பட்டதுதான் என்பதை இன்றைய நடப்புகள் நிரூபித்துவிட்டன.

நேற்று லோக சபையில் எதிர்க்கட்சித் தலைவர் எல். கே அத்வானி.

★ மக்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப புதிய அரசு ஒன்றைத் தேர்ந்தெடுக்கவசதியாக (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு இணை அமைச்சராக டி. பி. விஜேதுங்கா தெரிவு

சிறிலங்காவின் புதிய பாதுகாப்பு இணை அமைச்சராக பிரதமரும் நிதி அமைச்சருமான டி. பி. விஜேதுங்கா நேற்று ஜனாதிபதி பிரேமதாசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டார்.

## மன்னாரில் குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இப்பகுதியில் நான்கு குண்டுகள வீசப்பட்டன. சேதவிபரம் தெரியவில்லை. (மு)

## ஈச்சிலம்பத்தை சிப்பாய்கள் இருவர் காலை இழந்தனர்

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பத்தை இராணுவ முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் இருவர் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கித் தமது கால்களை இழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 7-30 மணிக்கு ஈச்சிலம்பத்தை இராணுவ முகாமில் இருந்து வெளியேறிபூநகருக்கு ரோந்து செல்ல முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் இருவர் பூநகரில் விடுதலைப்புலிகள் வைத்த மிதிவெடிகளில் சிக்கித் தமது கால்களை இழந்துள்ளனர், (மு)

## பரீட்சை விண்ணப்பங்களை ஆணையாளருக்கே அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில்ஏப்பிரல்மாதம் நடைபெற இருக்கும் விசேட க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளருக்கே அனுப்பிவைக்கும்படி யழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

முன்னர் பரீட்சை திணைக்களம் அறிவித்தபடி மவட்ட கல்விப்பணிப்பாளர்களுக்கு மேற்படி விண்ணப்பங்களை (4ஆம் பக்கம் பார்க்க)

## வேலைக்குத் திரும்பாதோரை மீள்பரிசீலனை செய்யலாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடமை புரியும் அரச ஊழியர்களுக்கு அப்பகுதிகளின் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு விசேட விடுமுறை வழங்கும்படி பொது நிர்வாக. மாகாண சபைகள், உள்நாட்டு அலுவலகள் அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பான சுற்று நிருபம் அரச நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படடுளளது;

அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: வடக்கு - கிழக்கு மாகாணதநைச் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹவ்லொக் வீதி குண்டு 60 கி. கிறாம் எடை கொண்டது

(கொழும்பு)

ஹவ்லொக் வீதிக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் வைக்கப்பட்ட தன்னியக்கக் கட்டுப்பாட்டுக் குண்டின் எடை 60 கிலோ கிறாம என்று பொலிஸ் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது. முன்பு புறக்கோட்டையில் வெடித்த குண்டு 35 கிலோ கிராம் என்றும், மருதானையில் வெடித்த (4ஆம பக்கம் பார்க்க)

## எட்டு உத்தியோகஸ்தரில் 7 பேர் இளைப்பாறினர்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்ட குடிசன மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தில் கடமையாற்றிய எட்டு புள்ளி விபர ஆய்வாளர்களில் ஏழுபேர் சுய விருப்பத்தின் கீழ் இளைப்பாறியுள்ளார்கள்.

தற்சமயம் ஒரேயொரு புள்ளி விபர ஆய்வாளர் மட்டும் கடமையாற்றுகிறார்.

இதனால் மேற்படி திணைக்களத்தின் வேலைகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## சர்வதேச மகளிர் தின விழா

யாழ். மாவட்ட சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்களின சமாச மகளிர் குழுவினரால் நடாத்தப்படும் சர்வதேச மகளிர் தின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## விளம்பரம்

### மில்க்வைற் திரவ சவர்க்காரம்

வெற்று அரைப்போத்தல் திருப்பித் தந்து போத்தலுக்கு ரூ. 1/- பெறுங்கள். மில்க் வைற் - யாழ்ப்பாணம்.

(B/2099)

### தவறிவிட்டது

துரைராசா வினோதினி என்பவருடைய அடையாள அட்டை இல. 707571926V புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரிக்கும் ஆவரங்காலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சோமஸ்கந்தா கல்லூரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(R-1157)

## கொடி வாரம் நீடிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி கருதி வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் அனுஷ்டிக்கப்படும் கொடிவாரம் இந்த மாதம் 10ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுமென வைத்தியசாலை அபிவிருத்திச்சபை அறிவித்துள்ளதுடன் இது தொடர்பாக நிதி சேகரிக்க வரும் தொண்டர்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அபிவிருத்திச்சபை மக்களைக் கேட்டுள்ளது.

### மத்திய கல்லூரியின் தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் தமிழ்த்தின விழா நாளை வெள்ளிக்கிழமை 8ஆம் திகதி தம்பர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கல்லூரியின் அதிபர் நா. க. சண்முகநாதப்பிள்ளையின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கலாநிதி இ. பாலசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கமும் கலந்து கொள்கிறார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## சைக்கிள் திருட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கி சைக்கிள் நிறுத்தும் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று திருடப் பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. புலோலியிலுள்ள வர்த்தகரான திரு. எஸ். ஆழ்வாப்பிள்ளை வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளும் திருடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, புலோலிப் பகுதியில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் சைக்கிள் திருட்டுக்களினால் இப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

(25)

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டில் இருக்கும் ஆயுர்வேத வைத்தியசாலையை புனருத்தாரணம் செய்வது பற்றிய ஆலோசனைக் கூட்டம் இன்று 7-03-1991 வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தில் இடம்பெறும். ஆயுர்வேத வைத்தியத் துறை பற்றிய ஆர்வமுள்ளோர், நலன் விரும்பிகள் இக்கூட்டத்தில் பங்குபற்றும்படி வேண்டப்படுகின்றனர்.

# கோயில் கதவுகள் உடைத்து 20,000 ரூபா கொள்ளை

(செ. தமை)

ஆவரங்கால் சிவன்கோயில் முன்பக்கக் கதவு உட்பட சகல மண்டபக்கதவுகளும் உடைக்கப்பட்டு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இத்திருட்டுச் சம்பவம் இடம் பெற்றது.

முன்னர் இரு தடவைகள் இக்கோயிலில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றதாகவும் அவை பின்னர் பிடிபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திருட்டுச்சம்பவம் தொடர்பாக பிரதேசப் பொறுப்பாளருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## தொழிலாளர் கல்விப் பாடநெறி

மேற்படி பாடநெறிக்கு விண்ணப்பம் கோரி ஏற்கனவே வெளியாகியுள்ள விளம்பரம் தொடர்பாக அறிவிக்கப்படுவது:

இப்பாடநெறியைப் பயின்று சித்தியெய்தும் தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் கல்விச் சான்றிதழ் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும்.

(B-2104) - பதிவாளர்

---

**வடபிராந்திய முச்சக்கர மோட்டார்வண்டி ஊழியர் சங்கம்**

## அறிவித்தல்

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் வண்டி ஊழியர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் 09 03-1991 அன்று காலை 9 30 மணியளவில் சங்கக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

இல. 55, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
(R/1150)

இங்ஙனம்
க. கீதநந்தன்
காரியதரிசி

---

## முதலாண்டு நினைவஞ்சலி



தாயின் நினைவுக்காக
1970-06-15

தமிழீழப் பிறப்புக்காக
1990-03 07

**வீரவேங்கை மேஜர் காண்டீபன்**
(கண்டாவளை)

கனலேந்தி நின்றாய் நீ
கண்களிலே காண்டீபனும்
கனலேந்தி நின்றாய்உன்
உடம்பினிலே வேங்கையாகி
கணலேந்தி நீசெய்த வீரத்தாலே
தூள்தூளாய்ப் போனது நம்
மணலேந்தி விளையாட
வந்தவிழல் எதிர்ப்படை
வீரனேநம் பிள்ளையென
வடிவேந்தி வந்தவனே
தீரனேநம் உடம்பில் ஒட்டித்
திரியுதுந்தன் தியாகநிழல்
மாறனேநம் தமிழ்மரபை
மதிப்பில் ஓங்கச் செய்தவனே
வாசனேநம் நினைவினிலே
இன்றுனக்கு நினைவஞ்சலி!

அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

கண்டாவளை. (B/ 2105)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தலைவனின் அரணே!
புலித்தனயர்க்கு அருணே!!



மலர்வு:
1969-01-27

உதிர்வு -
1991-02-05

புலிவீரன்
**மேஜர் சலீம்**
(அல்போன்சஸ் ஜோண் பிறின்ஸ்ரன்)

மண் மீட்கும் அறப்போரில் கலந்த
எம் கண்ணே! — தமிழ்
பண் மீட்டும் இசையாழ் உன்புகழ்
பாடும் நன்றே!
விண்ணார்க்கு விருந்தினனாய் விரைந்த
குளிர் நிலவே!
செந்நாக்காய் மிளிர்ந்திடுவோம் — தமிழ்
மனையெங்கும் மொளிர் சுடரே!

உனது பிரிவால் துயருறும்
அம்மா,
சகோதரர்கள்: கைமர், பென்றோ, மமான்ஸ்
சகோதரிகள்: அல்போன்சா, கசில்மா, ஜெலா
மைத்துனர்: பிலேந்திரன், பிறின்ஸ்
மைத்துனியர்: ஜெனிவி, கோகிலா, எட்னா,
மருமக்கள், மக்கள்.

16, 1ஆம் குறுக்கு வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
(R. 1156)

---

## நினைவு கூருகின்றோம்

### மார்ச் 7

1987ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
**அசோக்** (ந. சித்திரவேல் - திருக்கோவில்)

இதே ஆண்டு யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலால் உயிரிழந்த 2 பொதுமக்கள்

1988ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
**ரவி** (சு. தெய்வேந்திரன் - ஓமந்தை)

1989ஆம் ஆண்டு நித்திகைக்குளத்தில் இந்தியப் படையுடனான மோதலில் வீரமரணமடைந்த
**துஷியந்தன்** (த. ஜெயகுமார் - பொலிகண்டி)

இதே ஆண்டு வட்டக்கச்சியில் நிகழ்ந்த இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த
**ரமேஷ்**

இதே ஆண்டு கிராஞ்சியில் வீரமரணமடைந்த
**ரவி** (ஆ. புவனேஸ்வரன் - அரியாலை)

1990ஆம் ஆண்டு விபத்தில் எமைப்பிரிந்த
**மேஜர் காண்டீபன்**
(மகாலிங்கம் காண்டீபன் - கண்டாவளை)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

இந்நாளில் நீவீர்
எங்களைப் பிரிந்தாலும்
எந்நாளும் எம்மவர்
நினைவில் நிறைந்தீர்!

— விடுதலைப்புலிகள்
மக்கள் முன்னணி

(B 2109)

### ❋ சிந்தனைக்கு ❋

எண்ணங்கள் அனைத்தையும் விட காலம் அதிகம் போதிக்கும்.

— பெஞ்சமின் டிஸ்ரேலி


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி யாழ்ப்பாணம், 07-03-1991

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த.பெ.எண் 05


## மூடிய கதவைத் திறக்க வழிதேடும் இந்தியா

"இலங்கைத் தமிழரின் பெரும்பான்மை ஆதரவு விடுதலைப் புலிகளுக்கே உண்டு என்பதை இந்தியாவும் ஏற்றுக்கொள்கிறது" என இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் முஜ்குந்தே, சிறிலங்கா பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரின் செல்வாக்கு விடுதலைப் புலிகளுக்குத்தான் உள்ளது என்பதை இந்தியா ஏற்றுக்கொள்வதற்கு 1983 இல் இருந்து 1991 வரையுமான ஒன்பது ஆண்டுகள் இந்தியாவிற்குத் தேவைப்பட்டிருக்கின்றது. அதிலும் இராணுவத்தை அனுப்பி நேரடியாகப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பின்னரும் இதனை ஏற்பதற்கு இந்தியாவிற்கு சில வருடங்கள் சென்றுள்ளன.

உண்மையில் இது இந்தியாவிற்கு இன்று ஏற்பட்ட விளக்கமல்ல. இது 1983 இல் தான் ஏற்படாவிட்டாலும் 1987 இல் திட்டவட்டமாக இந்தியாவுடன் விடுதலைப் புலிகள் மோதியபோது கட்டாயம் ஏற்பட்டிருக்கும்.

1987க்கு முன்னர் இந்தியா தனது புலனாய்வு அறிக்கைகளைக் கொண்டும், இங்குள்ள ஏஜெண்டுகளின் கருத்துக்களைக் கொண்டுமே, தீர்மானங்களை மேற்கொண்டு வந்தது. இந்த நிலையில் புலனாய்வுத் துறையினரும், ஏஜெண்டுகளின் தப்பான ஆலோசனைகளையும் இந்தியாவை தவறான கணிப்பீட்டைச் செய்யத் தூண்டியிருக்கலாம்.

1987 இல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கூற்றொன்றே அவர் புலிகள்/தமிழர் தொடர்பான தப்புக்கணக்குக் கொள்கையைக் கொண்டிருந்தார் என்பதைக் காட்டுகின்றது. அவர் புலிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'இரண்டாயிரம் சாரம் கட்டிய பையன்கள்'' எனக் குறிப்பிட்டார்.

ஆனால் விடுதலைப் புலிகளுடன் இந்திய இராணுவம் மோதித் தோல்வி கண்டபோது இந்தியாவிற்கு நேரடி அனுபவத்தின் மூலம் திட்டவட்டமாகப் புரிந்திருக்கும் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று. ஏனெனில் மக்களின் ஆதரவின்றி இருவருடத்திற்கு மேல் இந்திய இராணுவத்துடன் விடுதலைப் புலிகள் மோதியிருக்க முடியாது என்பது தெளிவு.

ஆனால், இவ்வளவு காலதாமதமாக விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என இந்தியா அறிவித்துள்ளமை தமிழர்பால் இந்தியா கொண்டுள்ள பற்றினாலோ அன்றி கடந்த காலத்தில் தமிழருக்குச் செய்த துரோகத்திற்குப் பிராயச்சித்தம் தேடுவதற்கோ அல்ல. சிறிலங்காவுடன் தோல்வியில் முடிவுற்ற தனது இராஜதந்திரத் தோல்வியை மூடி மறைத்து மீண்டும் இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கே.

1987 இல் ஏற்பட்ட சிறிலங்கா இந்திய சமாதான உடன்படிக்கையில் இந்தியா தான் எதிர்பார்த்த வெற்றியை அடையவில்லை என்பதோடு தான் ஏமாற்றப்பட்டு விட்டதாகவும் உணர்கின்றது. சிறிலங்கா - இந்திய சமாதான உடன்படிக்கை காலாவதியான உடன்படிக்கை என சிறிலங்கா அறிவித்துள்ளதோடு அதில் இந்தியா தொடர்பான விடயங்களைக் கடைப்பிடிப்பதற்குக் கூடத் தயாராக இல்லை என வெளிப்படையாகவே தெரிவித்து வருகின்றது. இதில் காலஞ்சென்ற அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா முன்னணியில் நின்றார். மேலும் தற்போது இந்தியா தயாரித்த நட்புறவு ஒப்பந்தமும் சிறிலங்காவினால் ஏற்க முடியாத ஓர் உடன்படிக்கை என இந்தியாவிற்கான சிறிலங்காவின் தூதுவர் ஸ்ரான்லி கல்பகே தெரிவித்துள்ளதோடு, அந்த உடன்படிக்கையைக் கண்டித்து பத்திரிகைகளுக்கு, வெளிப்படையாகவே பேட்டியும் கொடுத்துள்ளார்.

மேலும் சிறிலங்கா இன்றும் இந்திய விரோத வெளிநாட்டுக் கொள்கையையே கொண்டுள்ளது என்பதை வளைகுடாப் பிரச்சினையும், இந்தியாவிற்குத் தெளிவாக உணர்த்தியுள்ளது.

இந்த நிலையில் இலங்கை விவகாரங்களில் தாம் ஒதுங்கியிருந்தால், நிரந்தரமாக ஒதுக்கப்பட்டு விடுவோம் என இன்று உணர்ந்துள்ள இந்தியா இலங்கை விவகாரங்களில் இன்று தானாகத் தலையீடு செய்வதற்கு முயற்சிக்கின்றது. இதன் மூலம் இலங்கையில் தனது நிலையை உறுதிப்படுத்தப் பார்க்கின்றது.

அதிலும் தமிழக சட்டசபைத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் 'தமிழரின் பாதுகாவலன்' என்ற நிலையை வெளிக்காட்ட வேண்டிய அவசியமும் இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில்தான் இலங்கை விவகாரத்தில் தனக்கு மூடப்பட்டிருக்கும் கதவைத் திறப்பதற்கான தட்டல் விடுதலைப் புலிகளுக்கு மக்களின் ஆதரவு உண்டு என்ற அறிவித்தல் ஆகும். இதை விடுத்து தமிழர் மீது கொண்டுள்ள அனுதாபத்தின் வெளிப்பாடல்ல.

## ஈராக்கில் பிரிவினை

வளைகுடாப் போரில் ஏற்பட்ட தோல்வி ஈராக்கிய உள்நாட்டுப் போரைத் தோற்றுவித்துள்ளது. போரில் ஏற்பட்ட ஆழப்புக்களினாலும், துன்பங்களினாலும் விரக்தியுற்றிருந்த மக்களை சதாம் ஹுசைனுக்கு எதிரானவர்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள பார்க்கின்றார்கள். இதன் சதாம் ஹுசைனின் உள்நாட்டு எதிரிகளும், அண்டை நாட்டு எதிரிகளும் தீவிரமாகச் செயற்படுகின்றார்கள். இது இன்று மத்திய கிழக்கின் ஸ்திரத்தன்மையை மேலும் குலைத்துள்ளதோடு மேலும் சிக்கல்களையும் தோற்றுவித்துள்ளது.

தாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதுபோல குர்திஷ் போராளிகள் ஈராக்கின் வடக்கில் சில நகரங்களைக் கைப்பற்றியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இச்செய்திகள் எவையும் முற்று முழுதாக ஊர்ஜிதம் செய்யப்பட்ட செய்திகளாக இல்லை.

இந்நிலையில் சில அரசியல் விமர்சகர்கள் ஈராக் மூன்று துண்டுகளாகப் பிரிந்து விடக்கூடிய சூழ்நிலை சில வேளைகளில் உருவாகி விடக்கூடும் எனத் தெரிவித்துள்ளனர். இவ்வாறு ஈராக் மூன்றாக உடையும் பட்சத்தில் தெற்கு ஈராக்கில் ஈரானிய மிக வலிமையானதாகவோ, பலவீனமானதாகவோ ஆகி விடாமல் ஒரு முடிவு எடுக்க வேண்டியிருக்கின்றது. அப்போதுதான் வளைகுடாப் பிராந்தியத்தில் சமநிலை காப்பாற்றப்படும் என்பது தான் விநோதம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்கில் பிரிவினை ஒன்று ஏற்படுவதை அரேபிய நாடுகள், குறிப்பாக சவூதி அரேபியா விரும்பாமைக்குக் காரணம் உண்டு. ஈராக் பிரிக்கப்படுமாகில் தென்மேற்கு ஆசியாவில் ஈரானின் கை ஓங்குவதுடன் இஸ்லாமிய அடிப்படை வாதம் தீவிரமாகப் பரவி அங்கு நிலவும் முடியாட்சி அரசுகளுக்குப் பெரும் கேடுகளை விளைவிக்கலாம். இதனைக் குவைத்கூட விரும்பப் போவதில்லை. இதேபோன்று வேறு பல காரணங்களும் உண்டு.

## மேற்குலகிற்கு ஆபத்தானதா?

ஈராக் தென்மேற்கு ஆசியாவில் அரபுக்களின் எல்லை எனப்படும். அரபுக்களின் ஒரு 'தடுப்புநாடாக' (பவர்ஸ்ரேட்) எனவும் சொல்லலாம். வடக்கே துருக்கியையும், கிழக்கே ஈரானையும் எல்லையாகக் கொண்டுள்ள ஈராக் ஏனைய திசைகளில் அரபு நாடுகளை எல்லையாகக் கொண்டுள்ளது. ஆயினும் ஏனைய அரபு நாடுகளைப் போன்று ஈராக் முழுமையாக அரபுக்களை மட்டும் கொண்ட நாடுமல்ல. இங்கு இன, மத வேறுபாடு உடைய மக்களும் வாழ்கிறார்கள். ஈராக்கின் வடக்கே அரேபியர்கள் அல்லாத குர்திஷ் இன மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் ஈராக்கில் இருந்து பிரிந்து ஒரு தனி நாடு அமைக்க வேண்டும் எனப் போராடிவருகின்றார்கள். அதேவேளை ஈராக்கின் தெற்கே பஸ்ரா நகர் உட்பட்ட பகுதியில் ஈரானின் ஆதரவான ஷியா முஸ்லிம் மதத்தைத் தழுவிய அடிப்படையைக் கொண்டவர்களாக வாழுகின்றார்கள். ஆனால் ஈராக்கின் மத்தியில் பாக்தாத் நகரை உள்ளடக்கிய பகுதியில் அரேபியர்கள் வாழ்கின்றார்கள்.

வடக்கேயுள்ள குர்திஷ் இன மக்கள் நீண்ட காலமாக தமது சுதந்திரத்திற்காகப் போராடி வருகின்றார்கள். இவ்வின மக்கள் ஈராக், ஈரான், துருக்கி ஆகிய மூன்று நாடுகளிலும் ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்து தமக்கென ஒரு சுதந்திர நாட்டை உருவாக்குவதை இலட்சியமாகக் கொண்டுள்ளார்கள். ஆனால் கடந்த கால வரலாற்றில் இம் மூன்று நாடுகளினாலும் மாறி மாறி ஏமாற்றப்பட்டார்களே ஒழிய இலாபம் எதுவும் அடையவில்லை. ஈரானுக்கும் - ஈராக்கிற்கும் இடையில் எட்டு ஆண்டுகள் நடைபெற்ற போரின் போது ஈரானுக்கு ஆதரவு அளித்தால் போரின் முடிவில் உதவுவதாக ஈரான் வாக்குறுதி அளித்தது. ஆனால், போரின் முடிவில் ஈரான் கைவிட்டதனால் சதாம் ஹுசைனின் பெரும் தாக்குதலுக்கு இந்த இனத்தினர் ஆளாயினர். இரசாயன ஆயுதங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

அதேவேளை ஈராக்கில் உள்ள ஷியா முஸ்லிம் அடிப்படைவாதிகள் ஈரானைத் தளமாகக் கொண்டு இயங்கி வருகின்றார்கள். இவர்கள் ஷியா முஸ்லிம்களுக்கு ஆதரவானதொரு இஸ்லாமிய அடிப்படைவாத நாடாக ஈராக்கை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்படுகின்றார்கள். இவர்களுக்கு பஸ்ரா உட்பட தெற்கு ஈராக்கில் பலமான ஆதரவுண்டு.

இவர்கள் அனைவரும் தற்போது சதாம் ஹுசைனுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளதோடு இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தெற்கு ஈராக்கில் உள்ள பஸ்ரா நகர் உட்பட பல நகரங்களைக் கைப்பற்றியுள்ள ஆதரவு ஷியா முஸ்லிம் அடிப்படைவாதிகளும, வடக்கில் குர்திஷ் இன மக்களின் ஆட்சி ஒன்றும் மத்தியில் பக்தாதிதை உள்ளிட்ட ஷியா இஸ்லாமத்தை அடிப்படையாகக் கொண்ட அரேபியர்களின் ஆட்சி ஒன்றும் ஏற்படக் கூடும் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால் இன்று ஈராக்கில் நடைபெறும் சம்பவங்களில் அவ்வாறானதொரு சூழ்நிலை உருவாகாது எனச் சொல்வதற்கும் இல்லை.

ஆனால் அவ்வாறானதொரு சூழ்நிலை உருவாகுமானால் அது மேற்கு ஆசியாவில் பெரும் நெருக்கடிகளை மேலும் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**ஜெயா**

ஆனால் ஈராக்கிற்கு எதிரான வளைகுடாப் போரில் ஈடுபட்ட அமெரிக்க தலைமையிலான மேற்கு கூட்டணியோ அன்றி அரேபியர்களோ ஈராக்கைத் துண்டாடும் நோக்கம் கொண்டிருக்கவில்லை. அதிலும் குறிப்பாக சவூதி அரேபியா கொண்டிருக்கவில்லை குவைத்தை மீட்பதற்குச் சென்ற அரேபியப் படையினர் ஒருவர்கூட ஈராக் எல்லையினுள் பிரவேசிக்கவில்லை என்பதோடு ஈராக் மீதான தாக்குதலுக்கான அமெரிக்காவின் கோரிக்கையையும் சவூதி அரேபிய நிராகரித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் சவூதி அரேபியா உட்பட சகல கூட்டணிப் படையினரும் சதாம் ஹுசைன் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தன. இவர்களின் இந்த நோக்கங்கள் அமெரிக்காவின் எண்ணத்திலும் தெளிவாக இருந்திருக்க வேண்டும்.

ஈராக் தொடர்பான போரில் அமெரிக்கா எவ்வாறான கொள்கைப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் ஹென்றிகிஸிங்கர் வெளியிட்ட கருத்து பெரும்பாலும் அமெரிக்காவின் கொள்கையைப் பிரதிபலித்துள்ளது எனச் சொல்லலாம். பக்கத்து நாட்டுப் படையெடுப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்கின்ற வல்லமையைப் பங்கப்படுத்தாமல், ஈராக்கின் பல்லைப் பிடுங்குவதே இலக்காக இருக்க வேண்டும் என ஹென்றிகிஸிங்கர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ஈராக்கின் அண்டை நாடுகளை ஈராக்கின் இராணுவ வலிமைக்கு நிகராகச் சமப்படுத்துவதுதான் அங்கே நடந்துவரும் இராணுவ நடவடிக்கைகளின் நடைமுறை விளைவாக இருக்கும். ஈராக்

இதேபோன்றதொரு நிலை மேற்குக் கூட்டணியினருக்கு ஏற்பட்டுவிடும். இஸ்லாமியப் புரட்சி மேற்கு ஆசியாவில் பரவுவது அமெரிக்க நலன்களுக்கு கேடு விளைவிப்பதாக அமைவதோடு இஸ்ரேலுக்கும் கேடு விளைவிப்பதாக அமைந்து விடக்கூடியதாகும். இந்நிலையில் அடிப்படை இஸ்லாமிய வாதம் பரவுவதைத் தடை செய்தல் அமெரிக்கக் கூட்டணிகளுக்கும் அத்தியாவசியமாகின்றது.

இந்நிலையில், மத்திய ஆசியாவில், தனது செல்வாக்கைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதற்காக ஈராக்கின் பிரிவினையைத் தடுத்து நிறுத்துதல் மேற்கு அணியினரின் தேவையாகின்றது. இதற்காக மாறிவரும் அரசியற்சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனுக்கு முட்டுக் கொடுக்க வேண்டிய நிலை மேற்குலகிற்கு ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

## வாகனங்களைப் பாதுகாக்க பணிப்பு

(கொழும்பு)

அரசாங்க வாகனங்களைப் பக்குவமாகப் பாவிக்கும்படி திணைக்களத் தலைவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். புதிய வாகனங்கள் கொள்வனவு செய்ய அரசாங்கத்திடம் பணம் பற்றாக்குறைதான் இதற்கான காரணமாம்.

நவம்பரில் நடக்கவிருக்கும் சார்க் மாநாட்டில் பயன்படுத்த புதிய வாகனங்களை இறக்குமதி செய்யும் எண்ணம் அரசாங்கத்திடமில்லை. திட்டமிடல் அமைச்சு திணைக்கள வாகனங்களின் பயன் பொருத்தம் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி திணைக்களங்களையும் அமைச்சுக்களையும் கேட்டுள்ளது. வாகனங்கள் நல்ல நிலையில் இருந்தால் புதியதாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படமாட்டாது.

அரசாங்க வாகனங்களைத் துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரிகளைப் பற்றிய தகவலையும் திட்டமிடல் அமைச்சு பொதுமக்களிடமிருந்து எதிர்பார்க்கிறது.

## அம்புலன்ஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதை அடுத்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் புன்னாலைக் கட்டுவன் ஆயர் கடவைப் பிள்ளையார் கோயில் பகுதியில் இருந்து அம்புலன்ஸ் வாகன சேவையை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

# அக்கரைப்பற்றில் கைதாகிய பலர் கல்முனைக்கு அனுப்பப்பட்டனர்

(அக்கரைப்பற்று)

சிறிலங்காவின் விசேட அதிரடிப்படையினரால் கடந்த 13 ஆம் திகதி அக்கரைப்பற்றில் கைது செய்யப்பட்டு கல்முனை அசுரடிப்படை முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களின் விபரங்கள் ஆலையடி வேம்பு பிரதேச பிரஜைகள் குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

சோமசுந்தரம் சந்திரசேகரம் (ஆலையடிவேம்பு), சின்னத்துரை இரசகுமார் (கோமாரி), ஐயத்துரை சுப்பிரமணியம் (திருக்கோவில்), மாணிக்கம் குணரத்தினம் (கோளாவில் வடக்கு), விநாயகமூர்த்தி விவேகானந்தன் (விநாயகபுரம்), முத்தன வரதன் (கோளாவில்), பொன்னம்பலம் டரராசசிங்கம் (தம்பிலுவில்) காளிக்குட்டி சந்தசாமி (கோளாவில்), சின்னத்தம்பி வரதன (கண்ணகிபுரம்) தில்லையம்பலம் செபராஜா (தம்பிலுவில்) சிவகுணம் - ராஜன் தம்பிலுவில், சின்னத்துரை சாந்தமூர்த்தி (தம்பிலுவில்), தர்மலிங்கம் மதமராசன் (தம்பிலுவில்). தியாகராஜா இராமச்சந்திரன் (தம்பிலுவில்), பாசிலாபணி ரவிச்சந்திரன் (அக்கரைப்பற்று), கந்தசாமி கோபாலபிள்ளை (திருக்கோயில்), சௌந்தரராசா சுதாகரன் (தம்பிலுவில்), பொன்னம்பலம் இராசதுரை (தம்பிலுவில்), சந்தசாமி ஆனந்தராஜா (தம்பிலுவில்), சின்னத்தம்பி தர்மலிங்கம் (விநாயகபுரம்), நாராயணன் சிவராஜா (கோளாவில்), கணபதிப்பிள்ளை தருமராஜா (தம்பிலுவில்) கிருஷ்ணபிள்ளை சாந்தகுமார் (தம்பிலுவில்), தம்பாச்சி லோகநாதன் பொத்துவில், சிவநாதன் சிறிகரன் (பொத்துவில்)

மேற்படி 25 பேரும் மேல் விசாரணையின் பின்பு விடுதலை செய்யப்படலாம் அல்லது சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்பு மகஸீன் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்படலாம் என தெரிய வருகிறது.

சந்திரசேகர் அரசாங்கம்

ராஜீவ்காந்தியை வேவு பார்க்கும் பிரச்சினை தொடர்பாக பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என அந்தக் கட்சி முடிவு எடுத்திருப்பதை தொடர்ந்து எதிர்க்கட்சிகள் நேற்றுக் காலை டில்லியில் கூடி இந்த முடிவுகளை மேற்கொண்டன.

ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமனின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தை சீக்கிரமே முடித்து விடுமாறு வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் நேற்று பாராளுமன்றத்தில் கோஷமிட்டன.

இதேநேரம் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் வாக்களிக்கப்போவதாகவும் மேற்படி கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது

சந்திரசேகரின்

சந்திரசேகர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் காங்கிரஸ் கட்சி தனது ஆதரவை விலக்கிக்கொண்டதாக வெளிப்படையாகக் கூறவில்லை என்றும் தனது அரசாங்கத்தை காங்கிரஸ் திரைமறைவிலிருந்து தமக்குத் தெரியாமலேயே இயக்கியது என்றும் குறிப்பிட்டார்.

68 நிலையங்களில

விலும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர்கள் உடுவில் மகளிர் கல்லூரி பரீட்சை நிலையத்திலும் பங்கேற்க வேண்டும்.

இதேநேரம் போக்குவரத்து வசதியீனம் காரணமாக தீவுப் பகுதிகளில் பரீட்சைகள் நடைபெற மாட்டாது எனவும் அவை வேறு இடங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதே நேரம் கொழும்பில் இம்மாதம் 9ஆம் திகதி நடைபெற இருக்கும் விசேட பரீட்சை தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொள்ளவும், மாவட்ட கல்விப்பணிப்பாளரின் பணிப்பில் இரண்டு அதிகாரிகள் கொழும்பு சென்றுள்ளனர்.

இதுபோலவே ஐந்தாம் ஆண்டு தரான புலமைப் பரீட்சையில் 98 நிலையங்களில் 14,073 மாணவர்கள் தோற்றவிருக்கின்றனர்

## வல்வெட்டித்துறை கடற்பரப்பில்

# கடற்படை தாக்கி ஒருவர் பலி; நால்வரைக் காணவில்லை

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை கடற்பிரதேசத்தில் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்துசேவை அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை கடலில் சென்றுகொண்டிருந்த வள்ளம் ஒன்றைத் துரத்தி சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல்களினால் இளைஞரான எஸ் ஜீவா (வயது 28 பலியானார். மேலும் இந்தத் தாக்குதலின் போது எஸ் முத்துலிங்கம் (வயது 56 ஆதிகோயிலடியைச் சேர்ந்தவர் படுகாயமுற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

மேலும் வள்ளத்தில் சென்ற ஏனைய நால்வர் பற்றிய விபரங்கள் இந்தச் செய்தி எழுதும் வரை தெரியவரவில்லை.

நேற்று பருத்தித்துறை கடற்பிரதேசத்தில் மீன் பிடிக்கச் சென்ற திரு பிரான்சிஸ் லோரென்சின் (வயது (30) கடற்படையினரால் துரத்திப் பிடிக்கப்பட்டு பலத்த தாக்குதலுக்குள்ளாகி கைமுட்டு உடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சேதமை) (25)

இந்தியப் பிரதமர்

கொள்ளும்வரை அவரைப் பதவியிலிருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

பதவி விலகல் கடிதத்தை கொடுத்துவிட்டு சந்திரசேகர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

தேர்தல் நடத்துவது பற்றி அடுத்த 24 மணித்தியாலத்தில் முடிவெடுப்பதாக குடியரசுத் தலைவர் தன்னிடம் கூறியதாகச் சந்திரசேகர் தெரிவித்தார்

பிரதமர் சந்திரசேகரின் திடீர் பதவி விலகலுக்கு இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியின் இல்லத்துக்கு முன்பு ஹரியானாப் பொலிஸார் வேவு பார்த்ததாகச் சொல்லப்படுவதே முக்கிய உடனடிக் காரணமாகும். வேவுபார்த்த பிரச்சினையில் போதுமான நடவடிக்கை மேற்கொள்ளும்வரையில் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக இந்திரா காங்கிரஸ் அறிவித்திருந்தது. இதனால சந்திரசேகர் அரசாங்கத்துக்கு நெருக்கடி உருவாகிற்று. இருந்தாலும் குடியரசுத்தலைவர் உரையில் வாக்கெடுப்பு நடைபெற்றால் அப்போது சந்திரசேகர் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்து அரசாங்கத்தைக் காப்பாற்றுவதாகவும் இந்திரா காங்கிரஸ் ஏற்கனவே தெரிவித்திருந்தது ஆனால் மக்கள் அவையில் சந்திரசேகர் குடியரசுத்தலைவர் உரையின் மீது நம்பிக்கை தெரிவித்துப் பேசுகையில்; தம்மை ஆதரிக்கும் காங்கிரஸ்கட்சி பாராளுமன்றத்தைப் புறக்கணித்ததால் தாம் பதவி விலகத் தீர்மானித்ததாக அவர் தெரிவித்தார். இதையடுத்து அமைச்சரவை கூடி பதவி விலக வேண்டும் என்றும், தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்றும தீர்மானித்தது.

வேவு பார்த்த சாதாரண சம்பவத்தை காரணம் காட்டி குழப்பத்தைத் தோற்றுவித்திருக்க கூடாது என்றும சநதிரசேகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் இரு அவைகளும் நேற்று ஒத்தி வைக்கப்பட்டன

ராஜீவ்காந்தி அரசாங்கம் அமைத்தால் அவரைத் தாம் ஆதரிக்கப்போவதில்லை என்று, தம்மை எதிர்த்தவர்களை ஏன் ஆதரிக்கவேண்டும் என்று சந்திரசேகர் செய்தியாளரிடம் கூறினர்

ஹவ்லொக்

குண்டு 40 கிலோ கிறாம் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. ஹவ்லொக் வீதிக் குண்டு பெறரா, மருதானைக் குண்டுகளை விடச் சக்திவாய்ந்ததாம்

அரசு

கொண்டபோதும் அரசு எதிர்பார்த்ததுபோலப் பெருமளவு மக்கள் கலந்து கொள்ளவில்லை என்றும் ஆயுதப் படையினரே நிறைந்துகாணப்பட்டனர் எனவும் பி.பி.ஸி. கொழும்பு முகவர் அறிவித்துள்ளார்.

பரீட்சை

அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்றும் பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பும் அதேவேளை விண்ணப்பதாரி தமது பெயர், முகவரி பரீட்சை நிலையம், விண்ணப்பித்த பாடநெறிகள் போன்ற சில முக்கிய விபரங்களை மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. விண்ணப்ப முடிவுத்திகதி மார்ச்15 ஆகும். (க)

பொதுத்தேர்தலுக்கு

நடந்த அகில இந்திய காரியக் கமிட்டிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரமே விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

சந்திரசேகர் ராஜினாமா

உடனடியாகத்தேர்தல் நடத்த வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

★ லோக் சபையைக் கலைத்து உடனடியாகத்தேர்தலை நடாத்த வேண்டும்.

தேசிய முன்னணியின் தலைவர் என். டி. ராமராவ் குடியரசுத் தலைவரை வற்புறுத்தியுள்ளார்.

★ தேர்தலை நடத்த நடவடிக்கைகள் தொடக்கப்படாதவரை மத்தியில் எந்த அரசாங்கத்தையும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்காது.

மேற்கு வங்காள முதல்வர் ஜோதி பாசு.

## மாந்தன் இரண்டாம் கட்டையில்

# விமானக் குண்டுவீச்சிற்கு பெண் பலி; 6 பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த குண்டுவீச்சு விமானங்கள் பரந்தன் இரண்டாம் கட்டைப் பகுதியில் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் குடும்பப் பெண்ணொருவர் கொல்லப்பட்டுள்ளார். ஆறு பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை நான்கு மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் இரண்டாம் கட்டைப் பகுதியிலுள்ள குணாஸ் வீதியில் இரு குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் சதாசிவம் தங்கம்மா(50) என்பவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தில் இதேஇடத்தைச் சேர்ந்த சதாசிவம்(60) சதாசிவம் கமலவேணி (30), அமிர்தலிங்கம் விஜயலட்சுமி (42), அமிர்தலிங்கம் பவளம் (32), அமிர்தலிங்கம் சந்திரவேணி (12), அமிர்தலிங்கம் நிமலன் (8) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். (மு)

# ஹவ்லொக் வீதியில் பலியான ஆயுதப்படையினர் விபரம்

(கொழும்பு)

ஹவ்லொக்வீதி குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஐந்து அதிரடிப்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட பொலிஸாரின் விபரங்கள் வருமாறு:

சரத் பிரேமலால் (பொலிஸ் சார்ஜன்ட் 16238, வயது 31) டொடன்கொடவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பொலிஸ்காரரான இவரது சகோதரரும் 1988 இல் நிலக் கண்ணிவெடியில் வடக்கில் கொல்லப்பட்டார் ரஞ்சித் பெரேரா (பி சி. 19926, வயது 26) தென் இலங்கையில் டிக்வெலக் கிராமத்தைச் சேர்ந்தவர். விபுலானந்தா அமரசிறி (பி சி. 31320. வயது 23, ஹாமலையைச் சேர்ந்தவர்: பூதியால் சலாகே கருணாரட்ன பண்டார (பி சி 12205 வயது32) தெல்தெனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், அதிரடிப்படை வாகனச்சாரதியாகக் கடமை புரிந்தவர் ரட்னாயக்க முதியன்சலாகே விக்கிரமரட்னா (பி. சி 16639, வயது 30 கலன்பிந்துவெவ இவரது பிறப்பிடமாகும்.

மேலும் அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவைச்சேர்ந்த அமைச்சரின் கார்ச் சாரதி, இரணுவ கோப்ரல் ஆர். பி பிரேமதாஸ, மெய்ப்பாதுகாவலர் இன்ஸ்பெக்டர் விஜயக்கோன் ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

இதேவேளை கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் 22பெண்களும், 51 ஆண்களும் பலத்த காயங்களுடன் தீவிர கண்காணிப்புச் சிகிச்சைப் பிரிவிலும், விபத்துப் பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# பால்டிக் குடியரசுகளை பிரிட்டன் ஆதரிக்கின்றது

### - ஜோன் மேயர்

(மாஸ்கோ)

பால்டிக்குடியரசுகளின் சுதந்திர தனிநாட்டுக் கோரிக்கையைப் பிரிட்டன் ஆதரிக்கிறது என்றும், இவ்விவகாரம் வன்முறையின்றித் தீர்க்கப்பட வேண்டுமென்றும் சோவியத் யூனியனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் பிரதமர் ஜோன்மேயர் ஜனாதிபதி கொர்பசேவிற்கு ஆலோசனை கூறியுள்ளார்.

மேலும் வளைகுடாவில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என்றதன் அவசியத்தை வலியுறுத்திய ஜோன்மேயர் ஈராக்கிற்கு சோவியத் ஆயுதங்களை வழங்கும் ஏதுக்கள் காணப்பட்டால் தாம் எதிர்க்கப்போவதாகவும் குறிப்பிட்டார்.

சோவியத் ஜனாதிபதியைச் சந்திக்க முன் பால்டிக் குடியரசுத் தலைவர்களை ஜோன் மேயர் சந்தித்திருந்தமை கவனிக்கத்தக்கது.

# 30 பாலஸ்தீனியர்கள் குவைத் ஆட்சியாளரால் கொலை

### - யசீர் அரபாத்

குவைத்தின் ஆட்சியாளர்கள் 30 பாலஸ்தீனர்களை கொன்றிருப்பதாக பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சுவிஸ் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் குவைத்தின் ஆயுதம் தரித்த குழுவினர் குவைத்தில் உள்ள நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்களை கைது செய்திருப்பதாக தெரிவித்தார்

வேலைக்குத்

சேர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்கு 12 - 06 - 90 முதல் 01 - 09 - 90 வரை லீவு வழங்கப்படலாம். இத்துடன் மேற்படி மாகாணங்களில் வேலையில் இருந்து நீங்கிச் சென்ற உத்தியோகத்தர் மீண்டும் வேலை பெறும் பொருட்டு விண்ணப்பிக்கலாம்.

வடக்கு -கிழக்கைச் சேர்ந்தவர்கள் விடுமுறையில் சொந்த ஊருக்குச் சென்று திரும்பவர இயலாது இருப்பின் அவர்களின் அதிகாரி மீளாய்வு செய்யலாம்.

பிற்போடப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று நடைபெறவிருந்த கலாநிதி இ பாலசுந்தரம் எழுதிய 'இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள்' என்ற நூலின் வெளியீட்டு விழா பிற்போடப்பட்டுள்ளதாகவும் மறு திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் மேற்படி நூல் வெளியீட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (மு)


## தேவை

தரவுகள் சேகரித்து நிரற்படுத்தும் உதவியாளர் எமது பணிமனைக்குத் தேவை. பொது விவேகமும், ஆங்கிலத் தேர்ச்சியும் சிறப்புத் தகைமைகளாக கருதப்படும ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு நேரில் பணிமனைக்கு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறனர்.

நிர்வாகி
ஈழநாதம்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.